DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No. 353/2022 |
| Session | ... | |
| | | Prosecution / PW-7 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

Name : மருத்துவர் திரு.ராஜ்குமார்

Father's Name (or)

Husband Name : த/பெ.

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

(A1 died. A3 present. A2 absent U/s.355 BNSS petition filed heard and allowed.)

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 24.07.2024

---

முதல் விசாரணை

1. நான் தற்போது இராமநாதபுரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் முதுநிலை அறுவை சிகிச்சை பிரிவில் பணியாற்றி

வருகிறேன். கடந்த 11.06.2018 ம் தேதியன்று இரவு 07.45 மணியளவில் நான் திருவாடானை அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது பாகம்பிரியாள் என்பவர் தன் கணவருடன் திருவாடானை அரசு மருத்துவமனைக்கு பரிசோதனைக்காக வந்தார்.

2. அவர் தன்னை அடையாளம் தெரிந்த மூன்று நபர்கள் கடம்பநேந்தல் கோவில் அருகே வைத்து மாலை 05.30 மணியளவில் கம்பி மற்றும் கல்லால் தாக்கியதாக சொல்லி என்னிடம் சிகிச்சைக்கு வந்தார். அவரை நான் பரிசோதனை செய்ததில் அவருக்கு வெளிப்புற காயங்கள் ஏதும் இல்லை. அவர் தனக்கு இடுப்பு பகுதியில் வலி இருப்பதாக தெரிவித்தார். அதற்கு முதலுதவி சிகிச்சை செய்து புறநோயாளயாக சிகிச்சையளித்து அனுப்பி வைத்தேன். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதரண காயம் என்று சான்று வழங்கினேன் **(அந்த காயச்சான்று அ.சா.ஆ.2 ஆககுறியீடு செய்யப்படுகிறது)**

3. அன்றைய தினம் இரவு 08.30 மணிக்கு பாகம்பிரியாள் என்பவரின் கணவர் ரத்தினம் என்பவரை அவரது மகன் திருவாடானை மருத்துவமனைக்கு அழைத்து வந்தார் நான் அவரை விசாரித்தபோது மூன்று நபர்கள் கடம்பனேந்தல் கோவில் அருகே வைத்து கம்பு மற்றும் கல்லால் தன்னை தாக்கியதாக சொல்லி தன்னிடம் சிகிச்சைக்ககாக வந்தார் அவரை பரிசோதனை செய்தததில் அவருக்கு வெளிப்புற காயங்கள் ஏதும் இல்லை. அவருக்கு வலது கை நடுவிரலில் சிறிய சிறாய்ப்பு காயம் ஒன்று காணப்பட்டது. அந்த காயத்திற்கு சிகிச்சையளித்து அவரை புறநோயாளியாக பாவித்து அவருக்கு ஏற்பட்ட காயம் சாதரண காயம் என்று சான்று வழங்கினேன் **(அந்த காயச்சான்று அ.சா.ஆ.3 ஆககுறியீடு செய்யப்படுகிறது)** இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. அ.சா.1 பாகம்பிரியாள் மற்றும் அ.சா.2 ரத்தினம் ஆகியோர்கள் எதிரிகளின் பெயரை குறிப்பிட்டு செல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1 சிகிச்சைக்கு என்னிடம் வரும்போது இரவு 07.45 மணி என்றால் சரிதான். அ.சா.1 அவரது கணவர் அ.சா.2 சிகிச்சைக்கு அழைத்து வந்தார்

2. அ.சா.2 ரத்தினம் என்னிடம் இரவு 08.30 மணிக்கு சிகிச்சைக்கு அவரது மகனுடன் சிகிச்சைக்கு வந்தார். சம்பவம் பற்றி நான் காவல்துறைக்கு தெரிவித்தேன். அ.சா.1, அ.சா2 ஆகியோர்களுக்கு நான் மேல்சிகிச்சைக்காக பரிந்துரை செய்யவில்லை என்றால் சரிதான்.

3. அ.சா.1 அவரது கணவரான அ.சா.2 னுடன் சைக்கிளில் செல்லும்போது கீழே விழுந்தால் அ.சா.2 ற்கு கையில் இதுபோன்ற சிறாய்ப்பு காயம் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் ஏற்பட வாய்ப்பு உண்டு அவ்வாறு சைக்கிளில் இருந்து விழும்போது மேற்சொன்னவாறு இடுப்பு வலி ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் ஏற்பட வாய்ப்பு உண்டு

4. அ.சா.1, அ.சா2 ஐ இரும்பு கம்பி, கட்டை போன்றவற்றால் அடித்ததற்கான வெளிப்புற காயங்கள் ஏதும் இல்லை என்றால் சரிதான்.